
அணையா விளக்கு அண்ணா

கலைஞர் கவிதை



விலை ரூ. 5


ARASU ARTS

தி.மு.க. தலைமைக்கழக வெளியீடு

இயக்க வரலாற்றை
நான் பாதி எழுதியுள்ளேன்!
மற்றொரு பாதியை
தம்பி கருணாநிதி எழுதுவார்!

-அண்ணா





அண்ணாவின் கால்மலரில்
முரசொலியின் காணிக்கை



கு 954.8111014
அணைவா
31137

பகுத்தறிவுத் தந்தையும் பாசமிகு தனயனும்



வாஞ்சைமிகு அண்ணனுடன் வழிநடக்கும் தம்பி!

அணையா விளக்கு அண்ணா

கலைஞர் கவிதை

அனையா விளக்கு அண்ணா

அண்ணா கவியரங்கம் என் தலைமையில்
சீர் பெற, சிறப்புற நடப்பதற்கு வாழ்த்திட வந்திருக்கும்
இனமானப் பேராசிரியப் பெருந்தகைக்கும் -
எரிமலைப் பெரியார் காண விரும்பிய
எழுச்சி யுக வழித் தோன்றல்
இளவல் வீரமணியாருக்கும் -
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும்
அருமைச் சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்களுக்கும்
நீதியரசர் பெருமக்களுக்கும்
மானமிகு தமிழ்ப் பெருஞ் சான்றோர்க்கும்
மகளிர் குலத்தினர்க்கும்
மாணவத் தம்பியர்க்கும்
கல்வியாளர்க்கும், கலையுலகத்தினர்க்கும்
தொழிலாளத் தோழர்கட்கும் - நான் கூறும்
இனிய வாழ்த்துக்களையும், வணக்கங்களையும்
ஏற்றுக் கொள்க என வேண்டுகிறேன்.



நூற்றாண்டு விழா தொடக்கம் அண்ணாவுக்கு என்றால்
காற்றாண்டு கொண்டு வந்து குவித்த கார் மேக மெல்லாம்
அன்பு மழையாய்ப் பொழியும்
பண்புப் பயிராய் விளையும்!

அறிவுப் புனலாய்ப் பெருகும் -
அனலிடை மெழுகாய் உருகும்;
ஆங்கோர் ஏழையின் கண்ணீர் கண்டுவிடின்!

மின்சாரத் தட்டுப்பாடு என்பதாலே
"சம்சாரம்" சொல்லுகின்றாராம்; கணவனிடம்
மெழுகுவர்த்தி வாங்கி வருக; என்று -
அந்தக் காலத்தில் அடர் இருளில் அடுக்களை வேலை முழுதும் பார்த்து

ஆட்டுக்கறி, கோழிக்கறி சமைத்து வைத்துப் பரிமாறி
அன்புக் கணவனை கொஞ்சி மகிழும் வரை
அகல்விளக்கே துணையென்று இருந்த நிலை மாறி;
மின் விளக்கு ஏற்றாமல்; புன்னகை பூக்காது எனும்
புதிய நிலை பெற்றுள்ள இந்தக் காலம் வரை
வாழ்கின்ற மாந்தருக்கு மின் விளக்கு, மெழுகுவர்த்தி எல்லாமே ஒன்று தான்!

அணையா விளக்கு அண்ணா

அகில இந்தியக் கட்சி என்று தேசிய வண்ணத்தை பெயரில்
கொடியில், கொள்கையில் இணைத்துக் கொள்ளும் பிற இயக்கங்கள் கூட
அடிக்கடி அதனை மறந்து விட்டு தமிழ்நாட்டில் மட்டுமே அரசியல் நடத்துகின்ற
அதிசயத்தைக் காணுகின்றோம் -

அதற்கோர் சான்றாக அடியேன் கூறுவேன் -
மின் சக்தி பற்றாக்குறை என்பது தமிழகத்தில் மட்டுமல்ல;
மராட்டியத்திலும் மற்றும் பல மாநிலங்களிலும் கூட
அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் மின் தடை உண்டு!

அங்கெல்லாம் சாலை மறியல், கடையடைப்பு என்று
அரசியலை அதற்காக வளைப்போர் இல்லை -
இங்கு தான் ஏடுகள் சிலவற்றுக்கு அதுவே வேலை...
கேலிச் சித்திரங்கள் கிண்டல் துணுக்குகள் -


அரசுடன் சேர்ந்து அவதி போக்கிட ஒத்துழைக்கும் உணர்வு;
அறவே இல்லை; அணுவளவும் இல்லை; ஆர்ப்பாட்டம் போர்ப் பாட்டு -
அரசியல், அரசியல்....
எல்லாமே அரசியல்....

ஒளி வந்த பிறகும் ஊரிலும் நகரிலும் ஒரே இருட்டு என்கின்றார்
முதலில் அந்தக் கனதனவான்களுக்காக; ஒரு
கண்ணொளித் திட்ட முகாம் நடத்தவேண்டும் போலும்!
(பலத்த கைதட்டல்)

"கூடங்குளம்" வந்து விட்டால் கூடி விடும் மின் உற்பத்தி - பின்
கவலையில்லை மக்களுக்கென்று - பிரதமரும், சோனியாவும்
உறுதியாகச் சொன்ன பிறகும்; அந்த உண்மையினை ஏற்காமல்

ஊர் கூட்டித் தமிழ்நாடு இருளாகிவிடுமென்று தம்பட்டம் அடிக்கின்றார் -
நாளைக்கு வெளிச்சம் வந்தால், நம்மோடு சேர்ந்து "தன்னால்" தான்
வந்ததென்பார் -

நமக்கேன் அவர்களுடன் வம்பு; அந்த அணையும் விளக்குகளை விடுத்து
"அணையா விளக்காம்" அண்ணா
அழைக்கின்றார்; அங்கு செல்வோம்!
வாரீர்!



அண்ணனே!
எங்கள் உயிரே!
உணர்வே!

அணையா விளக்கு அண்ணா

இனமானக் கோவே!
எழுச்சியின் வடிவே!
எண்ணங்கள் மலரும்
எழிலார் சோலையே!
எஃகுக் கம்பிகளாம்
இனிய தம்பிகளின் இதயத் துடிப்பே!
முதல் நூற்றாண்டு தொடக்கம் உனக்கு - ஆனால்
அறுபதுக்கு முன்பே முடிந்ததே ஆயுள் கணக்கு?

அழகு தமிழ்ப் பேச்சில்
அருவிகளை வென்றவன் நீ!
ஆங்கிலச் சொல்மழையோ - உன்
ஆற்றலுக்கு ஆலவட்டம்!

எழுத்துக் கற்கண்டுகளை மலையெனக் குவித்தாய்!
எறும்பென மாறி நாங்கள் அவற்றைச் சுவைத்தோம்!
முதல் நூற்றாண்டு தொடக்கம் உனக்கு - ஆனால்
அறுபதுக்கு முன்பே முடிந்ததே ஆயுள் கணக்கு?

காந்தம் உன் விழியில்!
சாந்தம் உன் மொழியில்!
வீரம் உன் செயலில்!
விவேகம் உன் முறையில்!
பாசம் உன் உடன்பிறப்பு!
பரிவு அதன் மறுபதிப்பு!

இதயமோ எதையும் தாங்கும்!
புதையலாய்த் தமிழர்க்குக் கிடைத்த திருவே!
முதல் நூற்றாண்டு தொடக்கம் உனக்கு - ஆனால்
அறுபதுக்கு முன்பே முடிந்ததே ஆயுள் கணக்கு?

அண்ணனே!
அறிவியக்கமாம் நம் கழகம்; ஆட்சி அமைக்கும் என்றாய்!
அண்ணன் சொல் திண்ணமாய்ப் பலிக்குமென்றார்;
பலித்தது; தமிழர்க்கு பழமெனச் சுவைத்தது!
நீ வருவதற்கு முன்பு
வரலாறு இருந்தது தமிழர்க்கு! ஆனால்
நீ வந்ததற்குப் பின்தான்
வகையாகத் தமிழன் முழு வரலாற்றை உணர்ந்தான்!

அணையா விளக்கு அண்ணா

வருஷங்கள்கூட ஆண்டுகளாக மாறின - இன்று
தை முதல் நாளே தமிழர் திருநாள் ஆயிற்று!

ஆற்றோரம் எனும் தலைப்பில்
அண்ணாமலைப் பல்கலையில் நீ,
ஆற்றிய உரைக்குப் பின் தானே - உனைத்
தூற்றியோரும் தொழுது பின்னால் வரத் தொடங்கினார்.
ஆரிய திராவிட இன வேறுபாடு குறித்து
அறிஞர் பெருந்தகை சுந்தரனாரும்,
ஆசிய ஜோதி நேரு பிரானும்
அழுத்தமாய் வைத்த ஆதாரங்களைப்
பொருத்தமாய் எடுத்துரைத்துக்
கருத்துரை வழங்கிய காஞ்சித் தலைவனே;
அன்று முதல் தானே நீ என்றும்
அணையா விளக்கானாய் திராவிடப் பண்பாட்டைச்
சூழ்ந்த இருள் விலக்க -
அய்யா பெரியாரின் அறப்போருக்கு வாளாக வாய்த்தவனே;
அய்யன் குறள் போல அண்ணா உன் உருவம் -
கம்ப ரசமும், ரோமாபுரி ராணியும் காட்டும் உன் பருவம் - எனினும்;
ஆரியமாயை கண்டால் அடித்து விரட்ட உயரும் உன் புருவம்!

இதிகாச புராணமாய் இறைவன் அவதாரக் கதைகளாய்
இலக்கியம் ஒரு காலத்தில் இருந்தது தமிழருக்கு
இருப்பினும் நீ வந்த பின்தான்
இயக்கினோம் அதனை; வீர காவியமாய் - காதல் ஓவியமாய் -
இப்புவி அறிந்திட; ஆய்ந்து தெளிந்திட! அறிவு மணம் கமழ்ந்திட!

அய்யா தந்த துணிவும், அண்ணா நீ தந்த தெளிவுமன்றோ
சங்கத் தமிழுக்கு விளக்கமளிக்கவும் -
தங்கக் குறளுக்குத் தக்கதோர் உரை எழுதவும்
ஒல்காப் புகழ் பெற்ற
தொல்காப்பியத்தை ஊர் மன்றில் உயர்த்திக் காட்டவும்
துணிவை எனக்குத் தந்ததென்பேன் -

சிலப்பதிகாரச் செல்வி கண்ணகியின் புகழ் மிக்கப் "பூம்புகார்"க்
காவியம் படைத்திடவும் - கடற்கரையில் சிலை அமைத்திடவும் -
வைத்த சிலையை வாஸ்து சாத்திரக்காரர் வலுவில் அகற்றியபோது
பைத்தியக்காரச் செயல் என்று அவர்களை கண்டித்திடவும்
அண்ணா நீ தான் எமக்கு ஆற்றலை வழங்கினாய்.

அய்யன் தொல்காப்பியன் அறிவு பற்றி
ஆராயப் புகுந்து; ஓரறிவு உயிரினம் முதலான ஆறறிவு மனிதன் வரை
அளந்து காட்டினான்; அய்யா வழியே நின்று நானும் அதைப்
பிளந்து காட்டினேன் - ஆம்;
உடலினால் அறியக் கூடிய ஓரறிவு உயிரினமும்;
உடல், வாய், இரண்டினாலும் அறியக் கூடிய ஈரறிவு உயிரினமும்;
உடல், வாய், மூக்கு, மூன்றினால் அறியக் கூடிய மூவறிவு உயிர் இனமும்;
உடல், வாய், மூக்கு, கண்களால் அறியக் கூடிய நாலறிவு உயிர் இனமும்;
உடல், வாய், மூக்கு, கண், செவிகளால் அறியக்கூடிய
ஐயறிவு உயிரினமும்;
மனத்தினாலும் அறியக் கூடியதே ஆறாம் அறிவென்னும்
பகுத்தறிவாகும்.

மக்கள் ஆறறிவுடையாராக இருப்பதற்கும் - அந்த ஆறில் ஒன்றிரண்டு
குறைவதற்கும் இலக்கணம்
பொறுப்பல்ல என்று நான் தொல்காப்பியப் பூங்காவில் குறிப்பிட்டிருப்பது
பகுத்தறிவுக்கும் பொருந்தும் என்பதால்; அதனைப்
பகுத்தறிவாளர் மட்டுமே பகுத்துணர முடியுமென்பேன்!

இரக்கமற்ற அரக்கன் யார் என்று
கம்பனையே நீதி மன்றத்தில் நிறுத்தி
கணைகள் பல தொடுத்து; இராமன்,
வாலியை மறைந்திருந்து கொன்ற போது
வடிந்ததோ இரக்கம் என்று; பகுத்தறிவால் கேள்வி கேட்டு,
பண்பாக வளைத்துப் போட்டாயே -
பகைவர் வீசிய வஞ்சக வலையை அறுத்துப் போட்டாயே;

மோகம் கொண்டேன் உம்மிடம் என்று சொன்ன
முத்துநகையாம் இராவணனின் தங்கை சூர்ப்பனகையின்
மூக்கு, முலை அறுத்தெறிந்த மும்மூர்த்திகளின் அவதாரம்
மூத்த மூர்த்தியாம் இராமனும், அவன் தம்பி இலக்குவனும்
இரக்கமுள்ள தெய்வங்களாம்
அயலான் மனைவி சீதை என்பதற்காக
அவளைத் தொடாமல் ஆஸ்ரமத்துடன் தூக்கிப் பறந்த
இராவணன் மட்டும் இரக்கமற்றவனோ?
உமது அகராதியில் இரக்கம் என்பதற்கு
தாருகா வனத்து ரிஷி பத்தினிகளிடம் தவ முனிவர்கள்

அனையா விளக்கு அண்ணா

கூட்டணி வைத்து, கொட்டம் அடிப்பது தான் இரக்கம் என்று
பொருள் கூறுவீரோ?

அதனை ஏற்காதவர் எவராயினும் அவரை
இரக்கமற்ற அரக்கர் என்பீரோ?

அகலிகையின் கற்பை அபகரித்த அமரர் கோன்
இந்திரனும் - அவனாலே அகலிகைக்
கல்லாகக் கிடக்க நேரிட்டதும்
இந்திரனின் இரக்க முள்ள செயல் என்று
இயம்புகின்றீரா பெரியீர்? எனக் கேட்டு
தலை தொங்கப் போடுமளவுக்கு
நிலை குலைய செய்தது அண்ணா நீ அன்றோ?

இருடிகள், மகான்கள், ஈஸ்வர அவதாரங்கள்;
இரக்கமுள்ள இதயம் பெற்றவரா
எனக் கேட்டு - நீதி தேவனையே மயங்கி விழச் செய்த
வழக்கறிஞன் நீ - புதிய நக்கீரப் புலவன் நீ!

சிறுத்தொண்டர் மனைவியிடம் சிவபெருமான்
பிள்ளைக் கறி கேட்டு - அதனை
அள்ளி உண்ட செயலுக்கு;
"இரக்கமுள்ள அரக்கத்தனம்"என்று ஒரு பெயருமுண்டோ?
தனிப்பண்பாடு கொண்ட இனம்தான் தமிழினம்!
தமிழினமே அதனை அறியாதிருந்த நேரம்!
தலைவா! நீ உதித்ததால்தான்
தமிழன் தமிழனானான்!

முதல் நூற்றாண்டு தொடக்கம் உனக்கு - ஆனால்
அறுபதுக்கு முன்பே முடிந்ததே ஆயுள் கணக்கு?

அண்ணனே!

தந்தை பெரியாரின் தளபதி நீ!
விந்தை மனிதர்களால்
விதவிதமாய் விளைந்திட்ட கேடுகளை
மொந்தை விஷமென்று மொழிந்தவன் நீ!

அறிஞன் நீ!
அறிவாசான் நீ!
வறிஞன் செல்வன் என்று



அணையா விளக்கு அண்ணா

வரையறுக்கும் வர்க்க பேதம்
வளர்த்தல் தீதென்று சமதர்ம
வழி நின்று உரைத்தவன் நீ!

அண்ணா மறுமலர்ச்சித் திட்டமென்று பெயர் சூட்டி
கண்ணாகக் காரியமாற்றும் உள்ளாட்சி அமைச்சர் அனையர்
பேருழைப்பால்
ஊர்வளம் பல்லாயிரம் பல லட்சமெனப் பெருக்கி நீர்வளம் நிலவளம் உயர்த்தி
பார் வளத்தில் பட்டிக்காடும் பட்டினமும் சமச் சீராய் இருக்கின்ற
காட்சி எனக்
காட்டுதற்கு அண்ணா உன் பெயர் ஊட்டிய உணர்வன்றோ
முழு முதற்காரணம்!

சேலத்து இரும்புக்கும், சேது சமுத்திர திட்டத்துக்கும்
செம்மொழி எனும் தகுதி தமிழுக்கும் வேண்டுமென்று
நீ விழியால் உரைத்ததை!

வியர்வை சிந்தி சாதிக்க; தமிழகத்தில்
வெகு மக்கள் தயாராயிருந்து வெற்றிகளைப்
படிப்படியாய் பெற்று வருகின்றோம்.

முழு வெற்றி கிடைத்துன் முகம்
முழு நிலவாய் ஒளிரக் காண;
உயிரையும் பணயம் வைப்போம்.....

ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்;
அண்ணா; உன் தம்பி இந்தக் கருணாநிதி
தன்னை ஆளாக்கியவரை மறக்க மாட்டான்
ஆயிரம் அடி உயரக் கோபுரக் கலசமாய் அமைந்தாலும்
அந்தக் கோபுரத்தின் அடித்தளம் கோடி கோடித்
தொண்டர்களாம் உடன்பிறப்புக்கள் தான் என்பதை
அவன் உயிர் இருக்கும் வரையில் நினைக்காமல்
இருக்க மாட்டான்.

அதனால் தானே
அன்றொரு நாள் நீ அவனைப் பற்றிப் பேசும்போது
தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்றாலும் -
அமைச்சர் பொறுப்பு ஏற்றுக் கொள் என்றாலும்
இரண்டையும் சமமாகக் கருதுபவன் என் தம்பி
கருணாநிதி யென்று சொன்னாய்-



அணையா விளக்கு அண்ணா

தனிமைச் சிறையில் அவன் அடைபட்டிருக்கும்
பாளையங்கோட்டை சிறைச்சாலை - உனக்கு யாத்திரை ஸ்தலம் என்று
நீ கண்ணீர் பொழிந்ததும்; -

இயக்க வரலாற்றை நான் பாதி எழுதியுள்ளேன்
மற்றொரு பாதியைக் கருணாநிதி தொடர்ந்து எழுதுவான் -
என்று உறுதிபட நீ மொழிந்ததும் -
என் நெஞ்சில் நிலையாகி விட்டதால் தானே; அண்ணா -
நான் வளர்த்த "கடா" என் மார்பில் பாய்வதையும்
நன்றி மறந்து என் முதுகில் குத்துவதையும்
என்னால் தாங்கிக் கொள்ள முடிகிறது -
ஆனால்; கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த கழகத்தை
எதிரிகட்குக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பர்களின் இழி செயலை
எப்படியண்ணா தாங்கிக் கொண்டு; உயிர் வாழ முடியும்?
அண்ணா; நீ இருக்குமிடம் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா என்று
நான் கேட்ட போது
இந்தா தம்பி யென்று நீ தந்த இதயம்
"மறப்போம்; மன்னிப்போம்" எனும் அந்த
மணிவாசகத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கும் -எப்போதும்!

துறப்போம் தூய லட்சியத்தை என்ற பேச்சுக்கு மட்டும்
இந்த இதயத்தில் என்றும் இடமில்லை என்பதை
உலகிற்கு உணர்த்திடுவோம்.

அன்று தமிழகத்தை வளப்படுத்தும் திட்டங்களுக்குப் போராடத்
தடந்தோள் உயர்த்துவதாகத் தமிழர்களை ஏமாற்றியவர்கள்; இன்று;
தாசானு தாசர்களாய் மாறிவிட்டார்

சேதுவே வேண்டாமென்கின்றார், செப்படி வித்தைக்காரர்!
சினம் கொள்ளல் தீதன்று; சேதுவும் அதனால் வரும் - தமிழ்
நிலச் செழிப்பும் தரை மட்டமாவதைத் தடுப்போர் கண்டு;

சிங்கத்தின் கூட்டமன்றோ; சிறு நரிகள் சூழ்ச்சிக்கா; தலை வணக்கம்!
பொங்குற்ற புலிகள் முன்னே புல்லியர்க்கா ஆர்ப்பாட்டம்?
எங்குற்றான் என் தமிழன்?
செங்குத்துத் தூணைப் போல் நிற்கின்றானா?
அங்கத்தில் துடிப்பின்றிக் கிடக்கின்றானா?

அணையா விளக்கு அண்ணா

அய்யோ பாவம்;
அவனுக்குச்
சங்கத்தில் பாட்டெழுதி அரங்கேற்றுங்கள்!
தங்கத்தில் சிலையொன்று அமைத்திடுங்கள் -
உளி இரண்டை உதட்டின் மேல் வைத்தாற் போல்
ஒளி மிகுந்த பாண்டியர்க்கு மீசையுண்டு
அளி வந்ததில்லையென்று இன முழக்கம்
செய்வது போல் -காதின்
வெளி வரையில் படர்ந்திருக்கும் சோழன் மீசை!

களிறாட்டுத் துதிக்கை போன்று
கண்நோக்கி வளர்ந்திருக்கும் - சற்று
நெளிகாட்டும் நீளமீசை சேரன் மீசை!
அன்றந்த மீசையெல்லாம் துடித்ததனால் - பகைக்
குன்றங்கள் பொடியான கதைகள் உண்டு!
இன்றந்த வீரம் வேண்டும் மிகவும் வேண்டும்!

இன் செயலில் வலிவு தேக்கி
வன் செயல்கள் அறவே போக்கி,
முன்பிருந்த தமிழர்களின் உணர்வைப் பெறுக!
தன்மான உணர்வைப் பெறுக!

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண
எப்போதும் தவம் இருக்கும் எங்கள் அண்ணனே!

எழுதினாய் தேர்தல் நேரத்தில் அறிக்கையாக -
மலிவான விலையில் மக்களுக்கு அரிசி தர வேண்டுமென்று!
அதனை
உன் மொழியிலேயே சொல்ல வேண்டுமென்றால்
“மக்களுக்குப் படியரிசி ஒரு ரூபாய்க்குப் போட
வேண்டுமென்றேன் -அதற்குள்
மாறன் அதை முரசொலியில் அண்ணாவின் வாக்குறுதி யென எழுதி விட்டான்
மலையைப் புரட்டும் காரியமாய் அன்று நான் கருதியதை; இன்று
மாநில மக்களின் மனம் களிக்க என் தம்பி கருணாநிதி
கிலோ அரிசி கிடைக்கும் ஒரு ரூபாய்க்கு என அறிவித்து;
என் கல்லறையில் கணக்கின்றி மலர் மாரி பொழிகின்றான் - நானும்
அவனை மகிழ்ச்சியாக வாரி அணைத்து வாழ்த்துகின்றேன்” -

இது கண்டு -
வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு.....
வாய்மையற்ற வன்கணாளர் வசை பாடுகின்றார் அதை
இசையாக ஆக்கிக் கொள்வீர் என் தம்பியரே என அறிவுரை கூறுகின்ற
காஞ்சிப் புத்தரே; உன் காலடியில் கழகம் சரணம் கச்சாமி!

★★★

முடிவுரை

அண்ணா நூற்றாண்டு விழா தொடக்கத்தில் - இந்திய
அரசியல் நிலவரத்தில் அணுவளவு கவனம் செலுத்தலாமா?
ஆம் - அணுவில் தானே அத்தனை பிரச்சினையும் ஆரம்பித்தது -
அனைத்து நாடுகளும் கவனித்த அந்தப் பிரச்சினையில்,

இடதுசாரிகளுக்கும் இங்குள்ள
இந்தியப் பேரரசின் ஆட்சியாளருக்கும்
இடையில் நான் நடுநிலை கொண்டு;
மதச் சார்பற்ற மனித நேய ஆட்சிதான்
மக்களைப் பாதுகாக்கும் வாய்மையுடையது எனும்
மனமுடையோனாய்த் தான் செயலாற்றினேன்!
மறுப்புரைப்போர் வெறுப்புரைப்போர், என
இரு சாரார் இரு முனையில் இருந்தபோதும்
எதிர்கால இந்தியாவை எண்ணிப் பார்த்தே
முடிவுகளை எடுத்துவந்தேன்
இரு சாராருக்கும் உறவு முடிச்சுகளைப் போட்டு வந்தேன்
இறுதிக் கட்டம் என்னைக் கலக்காமலே முடிவெடுத்து
எதிர் எதிராய் நின்றுவிட ஏதேதோ ஆகிவிட்டது!
ஏடுகளில் மட்டுமே அதைப் படித்து இதயம் நொந்தேன் -

மனித நேய உணர்வா, மத வெறிப் பூசலா
எப்பக்கம் நிற்பது என்ற கேள்விக்கு விடை காண;
அணிவகுப்போம் வா என்று அழைத்தது;
அன்புச் சகோதரி சோனியாவின் அரசியல் பாசறை!
அதனால்;
மத நல்லிணக்கம் விரும்பிப் போற்றி



அணையா விளக்கு அண்ணா


மனித நேயம் மதிக்கின்ற இடத்திலேயே இருந்து விட்டேன் -
மதச் சார்பற்ற அரசொன்று மத்தியிலும் மாநிலத்திலும்
அமைவதற்கு
மக்களைத் திரட்டுவோம்
வாரீர் வாரீர் என்று அழைக்கின்றேன்.

மன்றத்தில் திரண்டிருக்கும் பெருமக்காள்
பெரியார், அண்ணா கனவுகளில் பெரும் பகுதி
நிறைவேற்றம் எனினும்
தடுமாற்றமின்றி தமிழ் மொழியையும்
மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்கிட உரத்த குரல் கொடுப்போம்!
போராட்டத்துக்காக கோரிக்கை எழுப்பாமல்
கோரிக்கைக்காகப் போராடிட நல்வழித் தேர்ந்தெடுப்போம்!
எதிர்கால இந்தியா வலிமை பெற
வளம் பெற வலியுறுத்துவோம்!
மாநில சுயாட்சி;
மத்தியிலே கூட்டாட்சி!

★★★

அண்ணா நூற்றாண்டு விழா கவியரங்கம்
சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபம்
15 - 9 - 2008




எதையும் தாங்கும் இதயம்
இங்கே உறங்குகிறது

அண்ணா என்பது ஒரு தனி மனிதர் அல்ல.

அவர் ஒரு வரலாறு; அவர் ஒரு சகாப்தம்; அவர் ஒரு புத்தகம்; அவர் ஓர் இலக்கியம்; அவர் ஒரு கவிதை; அவரே தமிழ்; தமிழே அவர்; அவர் ஒரு கொள்கை; அவர் ஒரு இலட்சியம்; அவர் ஒரு கோட்பாடு; அவர் ஒரு குறிக்கோள்! - இவர்தான் அண்ணா.

நமக்கெல்லாம் அடித்தளத்தை அமைத்துத் தந்தவர் பேரறிஞர் அண்ணா - நம்முடைய ஆருயிர் அண்ணா. அவர் அமைத்துத் தந்த அடித்தளத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடம் எப்படி நேர்த்தியாக - வானளாவ - தமிழ் இனமான உணர்வை வளர்க்கின்ற வகையில் உயர்ந்திருக்கிறதோ அதைப்போலத்தான் அந்த அண்ணன் பெயரால் உருவாகியிருக்கின்றது அறிவாலயக் கட்டிடமும் அழகுற இங்கே மிளிர்கிறது.

- அண்ணா அறிவாலயத்தைத்
திறந்து வைத்து தலைவர் கலைஞர் உரை
- 15 - 9 - 1987

